1982 பிப்ரவரி 8]

என்பதால் தனித்தனியாக அந்தப் பிரிவு இயங்க வேண்டும் என்ற காரணத்தினால் Administrative department is absolutely different from the inspecting and auditing department என்ற முறையில் தனித்தனியாக இயங்குகின்றபொழுதுதான் தன்னிச்சையாக அவர்களால் செயல்பட முடியும் என்ற பரிந்துரை அரசுக்கு வந்ததால் அந்தப் பரிந்துரையை ஏற்று அரசு நடை முறைப்படுத்தி வருகிறது.

ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் நிறுவனம், செட்டிப்பேடு.

வினா எண் 93—திருமதி டி. யசோதா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செட்டிப்பேடு ஊரிலுள்ள ஸ்ரீராம் கெமிகல்ஸின் புதிய உரிமையாளர் அங்கு ஏற்கெனவே பணி புரிந்த ஊழியர்களை நீக்கிவிட்டு தன்னுடைய ஊரிலிருந்து ஆட்களை அழைத்து வேலைக்கு அமர்த்தியுள்ளது அரசுக்குத் தெரியுமா !

(ஆ) ஆம் என்றால் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா !

மாண்புமிகு திரு . எஸ்.இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ஸ்ரீராம் கெமிகல்ஸ் காம்ப்லெக்ஸ் நிர்வாகம் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியன் குளு கார்ப்பரேஷன் (Indian Glue Corporation) இடமிருந்து பொறுப்பு ஏற்றுக் கொண்டது. புதிய நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 18 (1) இன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 3 இன் கீழ் பழைய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றிய தொழிலாளர்களில் 32 தொழிலாளர்களுக்குப் புதிய நிர்வாகம் வேலை கொடுத்துள்ளது. மீதமுள்ள 17 தொழிலாளர்களுக்கும் வேலை கோரி தொழிற்சங்கத்தால் எழுப்பப்பட்ட தொழிற் தகராறு பின்னர் பிரதிநிதித்துவம் இல்லையென திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் நேரடித் தொழிலாளர்கள் அக்கம் பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து வந்து பணி புரிகிறார்கள். ஒப்பந்தக்காரர் கீழ் பணி புரிபவர்கள் மட்டுமே திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டாரத்தில் உள்ள ‘அழகாபுரி’ என்ற ஊரிலிருந்து வந்தவர்கள் ஆவார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நிர்வாகம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, பழைய தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க மறுக்கின்ற அந்த நிர்வாகத்தின் மீது அரசாங்கமே நேரடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குச் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கமே தங்களுக்கு ரெப்ரசன்டேடிவ் கப்பாசிட்டி இல்லை என்று சொல்லி, அவர்களே வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

அரிஜனங்களுக்கு வீடுகட்ட கடன் வழங்குதல்.

வினா எண் 94—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட கடன் வழங்க 1½ செண்ட் இடம் வேண்டும் என்ற விதி உள்ளதா !

(ஆ) ஆம் எனில் இதனை மாற்றி 1 செண்ட் இடத்திற்கே கடன் வழங்க உத்தேசம் உள்ளதா !

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : *(அ)* ஆம்.

(ஆ) இவ்விதியை சற்று தளர்த்தி அரசு 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளில் ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி கிராமங்களில் ஏற்கனவே உள்ள பழைய வீடுகளை இடித்து அதே இடத்தில் புதிதாக வீடுகள் கட்டிக் கொள்ள அங்கீகாரம் வழங்கலாம் என்றும் ஆனால் அவ்வாறு வீடு கட்டிக் கொள்ளத் தேவையான காலி மனை 201 சதுர அடி பரப்பில் நடைமுறையிலுள்ள வடிவமைப்புடன் வீடு கட்டிக் கொள்ள ஏதுவாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குகின்றபொழுது தற்போது குறைந்த பட்சம் 10 வீடுகளாவது ஓரிடத்தில் கட்ட வேண்டுமென்ற விதி மாற்றப்பட்டு எண்ணிக்கை அதிகமாக இல்லையென்றாலும் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.